பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 05 புதன்கிழமை 21.08.2024 கதிர் 287

## எம்.பி. ஒருவர் கட்சி தாவ ரூ. 100 கோடிக்குப் பேரம்

### குற்றஞ்சாட்டுகிறார் மரிக்கார்

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி ஜனாதிபதிக்கு ஆதரவளிக்குமாறு கட்சியின் உறுப்பினர் ஒருவரிடம் நூறு கோடி ரூபாய்க்கு பேரம் பேசப்பட்டதாக கட்சியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மஹரகம தொகுதிக் கிளையை உருவாக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களில் தமது கட்சி வெற்றியீட்டியது குறித்த அவநம்பிக்கை முற்றாக மறைந்து விட்டதாகவும், தான் செல்லும் இடமெல்லாம் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக வருவார் என்ற எதிர்பார்ப்புடன் தான் காணும் ☞ 8

## கட்சிகளை இரண்டாகப் பிளப்பதற்கு ரணிலை விட்டால் உலகில் ஆளில்லை

### இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

அரசியல் கட்சிகளை இரண்டாக உடைக்கக்கூடிய உலகில் உள்ள ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்று தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணித் தலைவர் இராதாகிருஷ்ணன்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு தெரிவித்து கொத்மலை பிரதேசத்தில் திங்கட்கிழமை நடந்த பரப்புரைக் கூட்டத்தில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன என எல்லா அரசியல் தரப்புக்களையும் இரண்டாக உடைத்துள்ளார் ரணில். அவரைப் போல இந்தப் பணியைச் செய்ய உலகில் வேறு தலைவர் கிடையாது.

அவர் பதவி அதிகாரத்தைப் பிடிப்பதற்கு உதவிய பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுட் புதிய யுகத்தை உருவாக்குவதாக வாக்குறுதியளித்தார். ஆனால் அவரால் அது முடிய வில்லை.

இருபது இலட்சம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதாக ☞ 8

## இது ரகசியம் அல்ல!

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அள்ளுகொள்ளையாக ரணில் பக்கம் தாவப் போகிறார்கள் என்று கதைகட்டிவிடுத் தனது பழக்கத்தை ஆளும் தரப்பு இன்னும் கைவிடவில்லை. நீண்ட காலமாக இப்படிக் கதை விடப்பட்டு வந்தாலும் இதுவரையில் அப்படி நடந்ததில்லை.

இப்போது தேர்தல் நெருங்கி வரும் நிலையில் மீண்டும் அதேபோன்றதொரு செய்தியைப் பரப்பத் தொடங்கியிருக்கின்றனர். இந்த முறை அதைப் பரப்புகின்றவர் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ரணில் பக்கம் தாவியவருமான மனுஷ நாணயக்கார. அவர் கட்சி தாவியதை அடுத்து அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் அமைசுப் பதவியும் பறிபோனது.

இப்பொழுது ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்கின்றனர் என்றும் மேலும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக அடுத்த சில தினங்களில் இணைந்து கொள்வர் எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். ☞ 2

## புதிய நாடாளுமன்றத்தில்

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒரே வருடத்திற்குள் ஒழிக்கவேண்டும்

### சமூகத்தின் முன்னணி பிரமுகர்கள் வலியுறுத்து

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக, அதுவும் அடுத்த நாடாளுமன்றம் பதவிக்கு வந்த ஒரு வருட காலத்திற்குள் அதனை நிறைவேற்றுவதற்கு 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேராசிரியர்கள், கலாநிதிகள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட சமூகத்தின் முன்னணிப் பிரமுகர்கள் 83 பேர் கையெழுத்திட்டு நேற்று வெளியிட்ட ஆவணம் ☞ 2

## தேசிய மக்கள் சக்தி 51% வாக்கு பெறும்

### அனுரகுமார நம்பிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி நிச்சயமாக 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். சில நேரங்களில் இது 60- முதல் 70% வரைகூட உயரும் என்றும் அவர் கூறினார்.

கோட்டாபயவின் 69 இலட்சம் பேரில் 50 இலட்சம் பேர் பாரம்பரிய பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லர். சஜித்திற்கு கிடைத்த 55 இலட்சம் சஜித்தின் சொந்த வாக்குகள் அல்ல. கோட்டாபயவிற்கு எதிரான வாக்குகள். கட்சிகளிடம் 80 லட்சத்துக்கும் அதிகமான எழுதப்படாத வாக்குகள் உள்ளன. 12 லட்சம் புதிய வாக்குகள் உள்ளன. எனவே, தேசிய மக்கள் சக்தி 70 லட்சம் வாக்குகளைத் தாண்டும். ☞ 8

## நிறைவேற்றதிகார ஜனாதிபதியை ஒழிக்கும் திட்டம் என்ன? வாக்குறுதி மட்டும் போதாது

### சஜித்திடம் அயலுறவுத்துறை அமைச்சர் கேள்வி

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கவிரும்பும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அதனை எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றனர் என்ற திட்டத்தையும் முன்வைக்கவேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார். தெளிவான திட்டம் இல்லாத தெளிவற்ற வாக்குறுதிகளால் வாக்காளர்களை குழப்பக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவரும் நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பில் புதிய வேண்டுகோள்களும் வாக்குறுதிகளும் வெளியாகியுள்ளன.

இது கடந்த ☞ 2

## ரணில் விக்கிரமசிங்கவால்

## பொருளாதாரம் வளர்ந்திருந்தால் முட்டை இன்று ரூபாய் 10 விற்கும்

### விஜித ஹேரத் எம்.பி. நக்கல்

ரணில்விக்கிரமசிங்க பொருளாதாரத்தை கட்டியெழுப்பி இருந்தார் என்றால் இன்று ஒரு முட்டையை பத்து ரூபாவிற்கு வாங்க முடிந்திருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

2019 இல் ☞ 8

## மாகாணத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் 3ஆம் வாசிப்புக்காக இன்று சமர்ப்பிப்பு

### ஒக்டோபர் 3 நிறைவேறும்

மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்ட மூலத்தை எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதி 3 ஆம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அன்றைய தினமே நிறைவேற்றுவதென சட்டவாக்க நிலையியல் குழுக்கூட்டத்தில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கேற்ற வகையில் உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட்டு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சம்ப்பிப்பதற்கும் தயார் நிலையில் உள்ளது.

நாடாளுமன்ற சட்டவாக்க நிலையியல் குழு நேற்றுக்கூடி மாகாண சபைத் ☞ 2

## பெரஹரவுக்கு இம்முறை யானைகள் பற்றாக்குறை

கண்டி எசல பெரஹரேயில் உள்ள ஸ்ரீ கதிர்காமம் மகாதேவாலய பெரஹரேயில் இரண்டு யானைகள் இல்லாமல் ஒற்றை யானையே ஊர்வலத்தில் செல்ல நேர்ந்தது. யானைகள் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கண்டி பெரஹரா வரலாற்றில் யானைகள் இவ்வளவு குறைந்தளவில் பங்கேற்றது இதுவே முதல் தடவை என பெரஹரா நடன கலைஞர்கள் மற்றும் யானை பாகர்கள் தெரிவிக்கின்றனர்.

வழக்கமாக கதிர்காமம் ஆலய ☞ 8

## நாட்டைக் கட்டியெழுப்பிய ரணிலை எதிர்க்க பெரமுனவிற்குத் தார்மீக உரிமையில்லை

### இப்படிச் சாடுகின்றார் அமைச்சர் பிரசன்ன

நாட்டைக் கட்டியெழுப்பிய தலைவரை எதிர்ப்பதற்கு பொதுஜன பெரமுன கட்சிக்குத் தார்மீக உரிமை இல்லை என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பொஹொட்டுவ உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டில் மீண்டும் அரசியல் செய்யக்கூடிய முறையை தற்போதைய ஜனாதிபதியே ☞ 2

## தவறான மருந்தால் பார்வையிழப்பு; ரூ 100 மில். நட்டஈடு கேட்டு வழக்கு

### நுவரெலிய சம்பவத்தில் பாதிக்கப்பட்டோர் நேற்று தாக்கல்

கண்புரை அறுவைச் சிகிச்சையின் போது தரக்குறைவான மருந்துகளைப் பயன்படுத்தியதால் பார்வையிழந்த மூ-வர் தமக்கு 100 மில்லியன் ரூபாய் இழப்பீடு கேட்டு உயர் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்தனர்.

நுவரெலியா வைத்தியசாலை ஒன்றில் இடம்பெற்ற சிகிச்சையின் போதே இந்தத் தவறு இடம்பெற்றது. இதில் பாதிக்கப்பட்ட வெலிமடை பிரதேச நோயாளர்கள் சட்ட மா அதிபர் மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அளுத்கமவில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

'இன்றைய நிலவரப்படி 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியே வந்துள்ளனர். ஓரிரு நாள்களில் இன்னும் நான்கைந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவார்கள் - என்றார். பார்க்கலாம் இதிலாவது எதாவது உண்மை இருக்கிறதா எ;ன்பதை.

.....................

தெற்கில் நடக்கும் தேர்தல் நகைச்சுவை சொல்லி மாளாது. ஜனாதிபதித்தேர்தலில்யார்வெல்வார் என்பது நிச்சயமில்லாத நிலையில், யாருக்கும் 50 சதவீதத்திற்கும் அதிக வாக்குகள் கிடைக்கும் என்பது தெரியாத நிலையில் அவரவர் இப்போதே பதவிக்களுக்கு அடிபடத் தொடங்கிவிட்டனர்.

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் சமகி ஜன பலவேகவின் உயர்மட்ட தலைவர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்திருக்கிறார். அடுத்த ஆட்சியில் புதிய பொலிஸ் மா அதிபர் பதவியைத் தனக்குத் தரவேண்டும் என்று கேட்டே அவர் போயிருக்கிறாராம்.

தனக்குப் பதவி தரப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டால், ஜனாதிபதி தேர்தலின் போது அதற்கான ஆதரவை வழங்க தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்தாராம்.

ஆடு அறுக்க முன்னர் எதற்கோ விலை பேசிய கதையைப் போன்று இருக்கின்றது அவரது செய்கை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிறைவேற்றதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அவர்களில் ஒருவர்.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் அடுத்த நாடாளுமன்றத்தின் முதல் வருடத்திற்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு உறுதியாகவும் பகிரங்கமாகவும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று அந்த ஆவணம் வலியுறுத்தியுள்ளது.

1978 அரசமைப்பின் 46 ஆண்டு கால அனுபவம், நிறைவேற்று ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்ட, வேகமான மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு, மதநல்லிணக்கம் மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்கிற எந்த நோக்கத்தையும் அது நிறைவேற்றவில்லை என்பதைக் காட்டுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சியானது அபிவிருத்தியில் மிகக் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. இன மோதலை துரிதப்படுத்துவதன் மூலமும், நமது அரசியல் அமைப்பை அடிக்கடி நெருக்கடிகளுக்கு ஆளாக்குவதன் மூலமும், அமைதி மற்றும் நாட்டின் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்குப் பதிலாக இது மோசமாக்கியுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையானது இந்த விரும்பத்தகாத விளைவுகளைஉருவாக்கியதற்கான காரணம், அதன் பொறுப்புக்கூறல் மற்றும் பதிலளிக்கக்கூடிய தன்மையின்மையில் காணப்படும் போதாமைகள் மூலம், அது சர்வாதிகாரம், ஊழல் மற்றும் இலங்கை மற்றும் இலங்கையர்களின்பொதுநலனைத் துடைக்க இயலாத் தன்மை என்பவற்றை அனுமதிக்கிறது. ஆகவே, இந்த ஆட்சிமுறையை ஒழிப்பது, அர்த்தமுள்ள மறு ஜனநாயகமயமாக்கலுக்கு அவசியமான மிக முக்கியமான ஒரே சீர்திருத்தம் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

2022 இல் இருந்து அண்மைய அனுபவம் இந்த முறைமையின் எதேச்சதிகார ஆற்றலை மட்டுமே வெளிச்சம் போட்டுக் காட்டியது. 1988 தொடங்கிய இந்த நிறைவேற்றதிராக ஜனாதிபதி முறையைஒழிப்பதற்குதேர்தல்களில் மக்கள் வழங்கிய ஆணையைப் போன்று வேறு எதற்கும் ஆணை வழங்கப்பட்டதில்லை என்பதையும் நாம் நினைவுகூர்கின்றோம்.

மிகசமீபத்தில்,2022ஆம்ஆண்டு 'அரகலயா' போராட்டத்தின்போது, 'அமைப்பு மாற்றத்திற்கு' அழைப்பு விடுத்தபோது, இந்த அமைப்புக்கும் மோசமான நிர்வாகம் மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை மக்கள் தெளிவாக வெளிப்படுத்தினர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதன் மூலமே 'அமைப்பு மாற்றம்' தொடங்கப்பட முடியும் - என்று அந்த ஆவணத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சஜித்திடம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில் வழங்கப்பட்ட ஆனால் ஒருபோதும் நிறைவேற்றப்படாத வாக்குறுதி.

சந்திரிகா குமாரதுங்க போன்ற தலைவர்கள்தங்களின்பதவிக்காலம் முடிவடையும் வரை இதனை பிற்போட்டனர்.

அதேவேளை மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தின் உத்தரவு காரணமாகவே தான் நிறைவேற்றதிகாரம் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்திருந்தார்.

உண்மையான நிலவரம் என்னவென்றால்நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது எங்களின் அரசமைப்பி;ன் சில பிரிவுகளின் மீது நேரடியாக தாக்கத்தை செலுத்துகின்றது.

சர்வஜனவாக்கெடுப்புஇல்லாமல் இந்த மாற்றத்தை மேற்கொள்ள முடியாது என உயர்நீதிமன்றம் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

இது வெறுமனே அரசியல் உறுதிப்பாட்டுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை, இது அரசமைப்புத் தேவை. ஆகவே நீங்கள் இந்த வாக்குறுதி குறித்து உண்மையான அர்ப்பணிப்பை கொண்டிருக்கின்றீர்கள் என்றால், அதை எப்படிச் செய்வது என்பது பற்றியும் பேசுவோம். சர்வஜன வாக்கெடுப்பு எப்போது இடம்பெறும்? உங்களின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரே இந்த விடயத்திற்கு தீர்வை காண்பதற்கு நீங்கள் திட்டமிட்டுள்ளீர்களா? என்பன போன்ற காலக்கெடு மற்றும் படிமுறைகள் குறித்த தெளிவான விளக்கம் மக்களுக்குத் தரப்படவேண்டும்.

நமது ஜனநாயகம் வெளிப்படை தன்மை மற்றும் நேர்மையால் செழிப்படைகின்றது. நிறைவேற்றதிகார முறை நீக்கம் என்ற மாற்றத்தை நீங்கள் உண்மையிலேயே செய்ய விரும்பினால் அதனை எவ்வாறு முன்னெடுக்க விரும்புகின்றீர்கள் என்ற வழிகாட்டுதல்களை வழங்கவேண்டியது உங்கள் கடமை.

இல்லையென்றால் தெளிவான திட்டம் இல்லாத தெளிவற்ற வாக்குறுதிகளால்

## நாட்டைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கினார் என்றும் அமைச்சர் விளக்கினார்.

குருநாகல் மாவட்டத்தின் நிகவெரட்டியதொகுதியில்ஜனாதிபதித் தேர்தல் கூட்டுக் குழுக்களை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார். நிகவெரட்டிய மஹாசென் போக்குவரத்து கூட்டுறவு சங்க மாநாட்டு மண்டபத்தி ல் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க மேடையில் நான் ஏறும் போது நீங்கள் எந்தக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள்என்று எல்லோரும் கேட்கிறார்கள். நாங்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். நாங்கள் அந்தக் கட்சியை விட்டு விலகவில்லை. இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்பதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாடு.

உங்கள் நிலைப்பாட்டால் உங்களைக் கட்சியில் இருந்து நீக்கினால் என்ன செய்வீர்கள் எனச் சிலர் கேட்கின்றனர். இது தொடர்பாக நாங்கள் ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம். அதற்காக கூட்டணியும் தனிக்கட்சியும் உருவாக்கியுள்ளோம்.

2015ஆம் ஆண்டு மஹிந்த தோல்வியடைந்தபோது, எமது கட்சியின் அலுவலகப் பொறுப்பாளர்கள் மஹிந்தவைக் கைவிட்டனர். அப்போது ஏகப் பொறுப்பாளராக இருந்த நான் மஹிந்த காற்றை ஏற்றிக்கொண்டு நாடு முழுவதும் சென்றேன். அவர் போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால் நாங்கள் எங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதால் நாங்கள் அதைச் செய்தோம்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு கோட்டாபய ராஜபக்சவைக் கொண்டுவர வேண்டாம்என்றுகூறியவன்நான். தன்னால்போட்டியிடமுடியாதுஎன்று அவர் கூறியபோதும் குடும்பமே ஒன்றுகூடி கோட்டாபயவை நிறுத்தவேண்டும் என்றனர். நாங்களும் அப்போதே ஒப்புக்கொண்டோம். அவரை வெற்றிக்கு அழைத்துச் சென்றோம். பிறகு நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்றோம். இரண்டு வருடங்கள்தான் அதிகாரத்தைத் தக்கவைக்க முடிந்தது.

நம் தலைவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டனர். 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியானார், மகிந்த ராஜபக்ச பிரதமரானார், பஸில் ராஜபக்ச நிதி அமைச்சரானார், சமல் மற்றும் நாமல் இருவரும் அந்த அமைச்சரவையில் இருந்தனர். நானும் அங்கே இருந்தேன். உரப் பிரச்சினை வந்தபோது, அதுபற்றிப் பேசியபோது எங்களின் கருத்துக்குமதிப்பளிக்கப்படவில்லை. கோட்டாபய தன்னிஷ்டப்படி பணியாற்றினார்.

மக்கள் எமக்கு அதிகாரம் கொடுத்தாலும் எமது தலைவர்கள் எம்மை பாதுகாத்தார்களா என்ற பிரச்சினைஉள்ளது?மே9,2022க்கு முந்திய நாள், பொஹொட்டுவவைச் சேர்ந்த சில பலமானவர்கள் ஒன்றிணைந்து எமது கட்சி உறுப்பினர்களை அராகலிய போட்டாக்களத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டனர். நீங்கள் அதைச் செய்யக்கூடாது என்று நான் எதிர்த்தேன். விடியற்காலையே நான் மகிந்தவிடம் சென்று அப்படிச் செய்யக்கூடாது என்று சொன்னேன். அன்றுஅதுதேவையில்லாதகாரியம். பின்னர் என்ன நடந்தது? எங்கள் உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர். வெட்கமாக இருந்தது. வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. மக்கள் இறந்தனர். அன்று எங்கள் தலைவர்கள் ஓடிவிட்டனர். நாட்டைப்பொறுப்பேற்க யாரும் இல்லை. அப்போது எமது தலைவர்கள் இந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்கவிடம்ஒப்படைத்தனர்.

அதை வழங்கியது ராஜபக்ச குடும்பம், நாங்கள் அல்ல. அது கைமாறி இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தல் வரும்போது இந்த நாட்டை கட்டியெழுப்பிய தலைவரை வேண்டாம் என்று சொல்வதற்கு தார்மீக உரிமை இல்லை. பெரமுன உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் வீதியில் இறங்கி அரசியல் செய்யக்கூடிய சூழலை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவே உருவாக்கினார்.

ரணில் விக்கிரமசிங்க இல்லாவிட்டால் இந்த நாடு பங்களாதேஷின் நிலைக்கு வந்திருக்கும். எங்கள் கட்சியிடம் ஒரே ஒரு விஷயத்தை கேட்டோம், அன்றையதினம்அவருக்குஅதிகாரம் கொடுக்க முடியுமானால் மீண்டும் ஏன் ஆட்சியை அவரிடம் கொடுக்க முடியாது? இதுதான் அந்தக் கேள்வி. நாமலை முன்னிறுத்தி வெல்ல முடியுமா என்றும் கேட்டோம். தோற்கும் என்று தெரிந்தும் ஏன் நாமலை நிறுத்தவேண்டும்? இதற்குப் பதிலாக வெற்றிபெறும் ஒரு வேட்பாளருக்கு உதவுமாறும், இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவருக்கு ஆதரவளிக்குமாறும் நாங்கள் பரிந்துரைத்தோம். ஆனால் அவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை.

நாடாளுமன்றத்தில் இருந்த 156 பேரில் எங்களுக்கு 96 பேர் எஞ்சியிருந்தனர். மற்றவர்கள் சிதறி ஓடினர். இன்று மொட்டுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்குழுவின் 104 உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உள்ளனர். எனவே, அவரது வெற்றி குறித்து எங்களுக்கு எந்த அச்சமும் இல்லை - என்றார்.

## மாகாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் சட்டமூலத்தின் திருத்தங்கள் குறித்து ஆராய்ந்தது. கடந்த தடவைகூடி உயர் நீதிமன்றத்தினால்பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை ஆராய்ந்த இந்தக் குழு, திருத்தப்பட்ட இறுதிவடிவத்தை நேற்றுப் பரிசீலித்து அங்கீகரித்தது. இன்றுஅதுநாடாளுமன்றத்தில்3ஆம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்படும்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில்கூடியசட்டவாக்க நிலையியல் குழுவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், மனோ கணேசன், கோவிந்தனன் கருணாகரம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் ஒகஸ்ட் 6 நாடாளுமன்றத்தில் மீண்டும் முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அன்றைய தினமே 2ஆம் வாசிப்புக்காக 2ஆம் வாசிப்பில் அங்கீகரிக்கப்பட்டு திருத்தங்களுக்காக சட்டவாக்க நிலையியல் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நிலையியற்குழுதிருத்தங்களை முடித்த நிலையில் அதனை 3ஆம் வாசிப்புக்காக இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். செப்டெம்பர் 3 இந்தச் சட்டமூலம் 3ஆம் வாசிப்பில், வாக்கெடுப்புக் கோரப்பட்டால் வாக்கெடுப்புக்கு விடப்பட்டும் இல்லையேல் அன்றைய தினமே ஏகமனதாக நிறைவேற்றப்படும்.

## தவறான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெகலியரம்புக்வெல, நுவரெலியா பொதுமருத்துவமனைபணிப்பாளர், மருந்துகள்ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுசெயலாளர்உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல் செய்தனர்.

வழக்கைத் தாக்கல் செய்திருக்கும் மூவரும் இந்தச் சிகிச்சை காரணமாக முற்றாகப் பார்வையைஇழந்துள்ளனர். தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக 100 மில்லியன் ரூபா இழப்பீடு தரவேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# கறைபடியாத கரங்கள் பெருமளவில் சஜித் அணியில் இருப்பதாலேயே மக்கள் காங்கிரஸ் ஆதரிக்கின்றது

## ரிஷாத் தெரிவிப்பு



கறைபடியாத கரங்களை அதிகமாகக்கொண்ட அணியை, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தலைமைத்துவம் ஏற்று வழிநடத்துவதாலேயே, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அவருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்ததாக, அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

முசலி, கொண்டச்சியில் இடம்பெற்ற'ரிஷாத் பதியுதீன் வெற்றிக்கிண்ண' கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் -

சஜித் பிரமேதாஸவுக்கு எமது கட்சியின் ஆதரவை நல்குவதாக அறிவித்த பின்னர், முதன்முதலாக ஒரு பொது நிகழ்வில் பங்கேற்று உரையாற்றக் கிடைத்துள்ளது. இந்தத் தேர்தலில் நாம் ஏமாந்துவிடக் கூடாது. எமக்குள் எத்தகைய கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் சமூகத்தின் நன்மைகருதி, புத்திசாலித்தனமாக வாக்குகளைப் பிரயோகிக்கும் தருணம் இது. நாம் மிக நிதானமாகச் சிந்திக்க வேண்டியதொரு காலகட்டத்தில் இருக்கிறோம்

நான்கு வேட்பாளர்களுக்கிடையே தீவிரப் போட்டி நிலவுகின்றது. மூவரை நிராகரித்து, நாம் சஜித்துக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தமைக்கான காரணங்கள் பல உள்ளன. கடந்த காலங்களைப் போன்று, எதிர்காலத்தில் இனவதப் பிசாசு தலையெடுத்து, சிறுபான்மைச் சமூகத்தை துவம்சம் செய்யக் கூடாது.

ஜனாஸாக்களை எரிக்கும் அரசியல் கலாசாரம் மீண்டும் உருவெடுக்கக் கூடாது. சகல சமூகங்களையும் அரவணைத்து செல்லக்கூடிய தலைவரையே நாம் தெரிவுசெய்துள்ளோம். மையத்துக்கள்எரிந்துகொண்டிருந்தபோது, அமைச்சரவையில் பக்கவாத்தியம்இசைத்துக்கொண்டிருந்தவர்கள் ரணிலுடன் சேர்ந்துள்ளனர்.

கோட்டாவின் 20 ஆவது திருத்தம் 3/2 பங்கினால் நிறைவேற்றப்பட வேண்டிய சூழ்நிலைஏற்பட்டிருந்தபோது,நமதுசமூகத்தைச் சார்ந்த 6 உறுப்பினர்கள் ஆதரவளித்து, 144 என்ற எண்ணிக்கையிலிருந்த கோட்டாவின் அரசுக்கு 150 என்ற எண்ணிக்கையை பெற்றுக்கொள்ளச் செய்தனர். அவர்களும் இப்போது ரணிலின் அணியில் இணைந்து நமது சமூகத்துக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

கள்வர்களின் கூடாரத்தில் இருந்த பல முன்னாள் அமைச்சர்கள் ரணிலுடன் தற்போது இணைந்து, இனிப்பான கதைகளைப் பேசி சிறுபான்மை சமூகத்தின் வாக்குகளை வசீகரிக்க முற்படுகின்றனர். எனவே, இந்த அணிக்கு நாம் வாக்களிக்க முடியுமா?

ஆயுதக் கலாசாரத்தைக் கையிலெடுத்து, இந்த நாட்டிலே ஜனநாயகத்தைக் கொலை செய்தவர்கள், இப்போது ஜனயாகம் பற்றி வாய்கிழியக் கத்துகின்றனர். இவர்களை நம்ப முடியுமா?

அபிவிருத்திக்கும் அற்ப விடயங்களுக்காகவும் நாம் ஏமாந்துவிடக் கூடாது. இது மக்கள் பணம். ஆட்சியாளர்களின் பணம் அல்ல என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

இன்று சிறுபான்மைச்சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரும்பாலான சமூகத் தலைவர்கள் சஜித் அணியுடன் கைகோர்த்துள்ளனர். பிரமேதாஸ, மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மைச் சமூக வாக்குகளால் வெற்றிபெற்றது போன்று, இம்முறையும் சஜித் பிரேமதாசவின் வெற்றி, சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகளாலேயே ஈடேறும் என்பதை மனதில் நிறுத்தி ஒற்றுமையுடன் வாக்களியுங்கள். - என்று கூறினார்.

இந்நிகழ்வில், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் மற்றும் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள், ஆதரவாளர்கள் உட்பட பெருந்திரளான பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர். (05)

# கைது செய்யச்சென்ற பொலிஸார் மீது பாய்ந்து குதறி கடித்த வளர்ப்பு நாய்கள்

## கடிக்கவிட்ட இருவர் கைது

மாவனெல்லை பகுதியில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரொருவரை கைது செய்ய சென்ற இரு பொலிஸ் அதிகாரிகளை நாயை தூண்டிவிட்டுகடிக்கசெய்தகுற்றசாட்டின் பேரில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயதுடைய ஆண் ஒருவரும் 23 வயதுடைய பெண் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரொருவரை கைது செய்வதற்காக மாவனெல்லை பகுதியில் உள்ள வீடொன்றுக்கு இரு பொலிஸ் அதிகாரிகள் சென்றுள்ளனர்.

அந்த வீட்டிலிருந்தவர்கள் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரைகைதுசெய்யவிடாமல்பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்துள்ள நிலையில் நாயை தூண்டிவிட்டு பொலிஸ் அதிகாரிகளை கடிக்க வைத்துள்ளனர். இதன்போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் அங்கிருந்துதப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் அந்த வீட்டில் இருந்த பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாய் கடித்ததில் காயமடைந்த இரு பொலிஸ்அதிகாரிகளும்மாவனெல்லை வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் ஒருவர் சிகிச்சை பெற்றுவீடுதிரும்பியுள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய சந்தேகநபரை கைது செய்வது தொடர்பில் மாவனெல்லை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# முஸ்லிம் காங்கிரஸின் பதவிகளிலிருந்து அம்பாறை எம்.பி. ஹரீஸ் இடைநிறுத்தம்



(பாறுக் ஷிஹான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் பதவியில்இருந்தும், உச்சபீட உறுப்புரிமையிலிருந்தும்அந்தக்கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மு.கா தலைவர் ரவூப் ஹக்கீமுடைய அறிவுறுத்தலுக்கு அமைவாக, கட்சியின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸுக்கு, இது தொடர்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) கடிதமொன்றினையும் அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென முஸ்லிம்காங்கிரஸ் தீர்மானித்துள்ள நிலையில், சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும்உழைக்க வேண்டுமென கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவுறுத்தியிருந்தார். இருந்தபோதும், இதுவரையில் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நடத்தப்பட்ட எந்தவொரு கூட்டத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கலந்து கொள்ளவில்லை.

ஆயினும் அம்பாறை மாவட்டத்தின் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்பைசல்காசிம், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் - கட்சித் தலைவருடன் இணைந்து, சஜித் பிரேதமாஸவை ஆதரித்துநடத்தப்பட்டகூட்டங்களில் கலந்து கொண்டனர்.

மறுபுறமாக, முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் அலிசாஹிர் மௌலானா - ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்குதனதுஆதரவை அறிவித்தமையால், அவர் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, அரசாங்கத்திடமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்ஹரீஸ்,860மில்லியன் ரூபாவை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டு: தேரர் உட்பட 06 பேர் கைதாகினர்

மொரகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் தேரர் உட்பட 06 சந்தேக நபர்கள் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என மொரகொட பொலிஸார் தெரிவித்தனர்.

மொரகொடபொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 40 வயதுடைய தேரரொருவரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேகநபர்கள் அடியாகல மற்றும் அகலவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25, 33, 36 மற்றும் 58 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும்பொருட்கள், பூஜை பொருட்கள், வேன் மற்றும் கார் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலத்த மழையினால் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் களுத்துறை, புத்தளம்மற்றும்இரத்தினபுரிமாவட்டங்களில் 929 குடும்பங்களைச் சேர்ந்த 3,243 பேர்பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையினால் இருவர் காயமடைந்துள்ளதுடன், 27 வீடுகளுக்கு பகுதியளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் மதுராவளை பிரதேச செயலகப் பிரிவில் வரகாகொட கலவெல்லவ வீதி, அலமோதர- பரகஸ்தோட்ட வீதி, மில்லனிய பிரதேசசெயலகப் பிரிவின் பனாகொட- நர்துபான வீதி, புலத்சிங்கல- மொல்காவ வீதி, புலத்சிங்கல - மொல்காவ வீதி, புலத்சிங்கலத்தீ பிரிவின் செங்கலத்தலைவீதி, உப்பலத்தீவில் உள்ள பல வீதிகள் மற்றும் பாலிந்தநுவர பிரதேச செயலகப் பிரிவில் பதுரலிய - பெனிகல வீதி ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

களுத்துறைமற்றும்இரத்தினபுரி மாவட்டங்களில்உள்ளபலபிரதேச செயலகங்களுக்கும்அனர்த்தமுகாமைத்துவ மத்திய நிலையம் மண்சரிவு அபாயம் காரணமாக சிவப்பு அறிவித்தலைவெளியிட்டுள்ளது. கொழும்பு, காலி, கேகாலை, மாத்தறை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு நீடிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல்திணைக்களம் எச்சரித்துள்ளது.

தென் மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், கண்டிமற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

பாதிக்கப்படும் பகுதிகளில் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எப்போது? எப்படி?

நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ள வாக்குறுதி குறித்த எதிர்வினைகள் வெளிப்பட்டுள்ளன. அவரது வாக்குறுதியை அவர் எவ்வளவு காலத்திற்குள், எப்படி நிறைவேற்றுவார் என்பதை அறிவிக்க வேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார். அது நியாயமான கேள்விகளும்கூட.

இந்த அட்சிமுறை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதும் மக்களிடம் கருத்துக் கணிப்பை நடத்துவதும் அவசியம் என்பதால், சஜித் தனது வாக்குறுதியை எப்படி நிறைவேற்றுவார் என்பதைக் குறிப்பிடவேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்த நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது தொடர்பில் அனைத்து அரசுத் தலைவர் வேட்பாளர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று நாட்டின் மூத்த முக்கிய பிரமுகர்கள் 83 பேரும் வலியுறுத்தியுள்ளனர். அது தொடர்பில் ஆவணம் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

அரசுத் தலைவர் தேர்தல் முடிந்த கையோடு நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதன் காரணத்தால், புதிய நாடாளுமன்றம் அமைந்த ஒரு வருட காலத்திற்குள் இந்த நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த ஆவணம் வலியுறுத்துகின்றது.

பேராசிரியர்கள், கலாநிதிகள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட சமூகத்தின் முன்னணிப் பிரமுகர்கள் கையெழுத்திட்டு நேற்று வெளியிட்ட இந்த ஆவணம், நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமை கொண்டுவரப்பட்ட நோக்கம் எதுவும் நிறைவேறவில்லை என்பதையும் வலியுறுத்துகின்றது.

''1978 அரசமைப்பின் 46 ஆண்டு கால அனுபவம், நிறைவேற்று ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்ட, வேகமான மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு, மத நல்லிணக்கம் மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்கிற எந்த நோக்கத்தையும் அது நிறைவேற்றவில்லை என்பதைக் காட்டுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சியானது அபிவிருத்தியில் மிகக் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. இனமோதலை துரிதப்படுத்துவதன் மூலமும், நமது அரசியல் அமைப்பை அடிக்கடி நெருக்கடிகளுக்கு ஆளாக்குவதன் மூலமும், அமைதி மற்றும் நாட்டின் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்குப் பதிலாக இது மோசமாக்கியுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையானது இந்த விரும்பத்தகாத விளைவுகளை உருவாக்கியதற்கான காரணம், அதன் பொறுப்புக்கூறல் மற்றும் பதிலளிக்கக்கூடியதன்மையின்மையில் காணப்படும் போதாமைகள் மூலம், அது சர்வாதிகாரம், ஊழல் மற்றும் இலங்கை மற்றும் இலங்கையர்களின் பொது நலனைத் துடைக்க இயலாத் தன்மை என்பவற்றை அனுமதிக்கிறது. ஆகவே, இந்த ஆட்சிமுறையை ஒழிப்பது, அர்த்தமுள்ள மறு ஜனநாயகமயமாக்கலுக்கு அவசியமான மிக முக்கியமான ஒரே சீர்திருத்தம் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்'' என்கிறது அந்த ஆவணம்.

இந்த அரசுத் தலைவர் முறையை ஒழிப்பதற்குக் கிடைத்த மக்கள் ஆணையைப் போன்று வேறு எதற்கும் மக்கள் ஆணை கிடைத்ததில்லை என்பதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது. 1994 சந்திரிக்கா அம்மையார் ஆட்சிக்கு வந்தபோதிருந்து இந்தக் கோரிக்கைக்காக மக்கள் ஆணை வழங்கிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள்தான் அதனைப் பொருட்படுத்தவேயில்லை.

இனிமேலும் அத்தகைய நிலை தொடரக்கூடாது. அதற்கேற்ற வகையில் தனது தேர்தல் அறிக்கையில் இந்த வாக்குறுதியை தான் எவ்வளவு காலத்திற்குள் எப்படி நிறைவேற்றார் என்பதை சஜித் பிரேமதாச குறிப்பிடவேண்டும். அதுமட்டுமல்ல ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்திற்குள் புதிய அரசமைப்பு ஒன்றை அவர் ஏற்படுத்திவிட்டால், அதற்கூடாகவே இந்த மாற்றங்களையும் அவரால் மேற்கொள்ள முடியும்.

# ஆட்சிகளைப் பிடிக்கும் வலதுசாரிகள்!

பிரபாத் பட்நாயக்



உலகின் பல நாடுகளில் மையவாத - வலதுசாரி கட்சிகளோ மையவாத - இடதுசாரி கட்சிகளோதான் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடிக்கின்றன. மார்கரெட் தாட்சரும் டோனி பிளேரும் மையவாத - வலதுசாரியினர் என்றால், மன்மோகன் சிங்கும் ப.சிதம்பரமும் மையவாத சித்தாந்தங்களை உறுதியாகப் பின்பற்றியவர்கள்.

நவதாராளமயக் கொள்கை ஏழைகளின் வாழ்க்கையை மிகுந்த வன்மத்தோடு நிலை குலையச் செய்துவிட்டது, வருமானம் - செல்வக் குவிப்பு ஆகியவற்றில் மிகப் பெருமளவு ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது, மக்களில்பெரும்பாலானவர்களின்வாழ்க்கைத்தரத்தைமுன்னேறவிடாமல் தேக்க நிலைக்கோ அல்லது வீழ்ச்சிக்கோ கொண்டுசென்றுள்ளது.

ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி வீதம் கண்ணியமான அளவுக்கு வளர்ந்துவிட்ட நிலையிலும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது. பெரும்பாலான மக்களால் இது வெகுவாக வெறுக்கப்படுவதால் மையவாத அரசியல் கட்சிகளும் தலைவர்களும் தோல்வியைச் சந்திக்கின்றனர்.

இந்தியாவில் 2014 மக்களவை பொதுத் தேர்தலில் இது நடந்தது. சமீபத்திய ஐரோப்பிய நாடுகளின் தேர்தல் முடிவுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. வங்கதேசத்தில் அரசுக்கு எதிராக மாணவர்கள் கிளர்ந்தெழுவதற்கும் இதுவே முக்கிய காரணம். (வங்கதேச அரசியல் பற்றி இங்கு விவாதிக்கப்போவதில்லை).

### மக்கள் ஆதரவு யார் பக்கம்?

ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் மக்களால் கடுமையாக நிராகரிக்கப்பட்ட இம்மானுவேல் மெக்ரான் பிரான்ஸில், உரிய காலத்துக்கு முன்னதாகவே பொதுத் தேர்தலை நடத்திய பிறகும் தோல்வியையே சந்தித்துள்ளார்.

பிரிட்டனில் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் கெய்ர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர் கட்சி, மையவாத - இடதுசாரி சார்புள்ள கட்சி - அதிகத் தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது, ஆனால் அதற்குக் காரணம் இதற்கு முன்னால் ஆண்ட டோரி (பழமைவாத -கன்சர்வேடிவ்) கட்சியின் கொள்கைகள்தான். தொழிலாளர் கட்சிக்கு 2019 தேர்தலில் 32.1% வாக்குகள் கிடைத்தன, இந்தத் தேர்தலில் 33.8% வாக்குகள்தான் கிடைத்தன. டோரி கட்சிக்கு வாக்களிக்கக் கூடாது என்று முடிவெடுத்த பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள்கூட, அப்படியே தொழிலாளர் கட்சி பக்கம்திரும்பிவிடவில்லைஎன்பதுகவனிக்கத்தக்கது.

மக்களில் பெரும்பாலானவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக இருப்பதற்குக் காரணம் அரசின் மையவாதக் கொள்கைதான். நவதாராளமயக் கொள்கையால் மக்களில் மிகச் சிறிய அடுக்குக்கு மட்டுமே அதிக லாபம் அடைகிறது. இதனால் மாற்றுவழிமுறையைக் கையாள்வதாகக் கூறும் வலதுசாரி அல்லது இடதுசாரிகள் பக்கம் மக்களுடைய ஆதரவு குவிகிறது.

### பிரான்ஸின் நிலை

பிரான்ஸில் அவசர அவசரமாக உருவாக்கப்பட்ட 'புதிய மக்கள் முன்னணி' நாடாளுமன்றத்தில் அதிக தொகுதிகளைவென்றகூட்டணியாகஇருக்கிறது. மரீன் லி பென்னுடைய 'தேசியக் கட்சி' ஆட்சியமைக்கும் வாய்ப்பை இழந்தாலும், மெக்ரானுடைய கட்சிக்கு அடுத்து மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. அந்தக் கட்சிக்கு வாக்குகளும் தொகுதிகளும் கணிசமாக அதிகரித்துள்ளன.

அதேபோல பிரிட்டனில் நடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் அதிகம் ஆதாயம் அடைந்தது நைஜல் ஃபாரேஜ் தலைமையிலான 'பிரிட்டனை சீர்திருத்துவோம்' என்ற தீவிர வலதுசாரி கட்சிதான். டோரி கட்சிக்கு 24% வாக்குகள் கிடைத்தன என்றால் நைஜல் கட்சிக்கு 14% வாக்குகள் கிடைத்தன என்பதிலிருந்தே தெரியும்.

அதேசமயம் ஜெரிமி கோபின் தீவிர இடதுசாரி கருத்துகளுக்காக கட்சியிலிருந்து விலக்கப்பட்டதால், வடக்கு ஐலிங்டன் தொகுதியில் சுயேச்சையாகவே போட்டியிட்டு வென்றிருக்கிறார். இடதுசாரி கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிடாவிட்டாலும் இடதுசாரிகளுக்கும் மக்களிடையே ஆதரவு இருப்பது தெரிகிறது.

### ஜெர்மன் நிலை

ஜெர்மன் நாட்டிலும் உக்ரைன் போர் காரணமாக மக்களுக்கு வழக்கமாக கிடைத்திருக்க வேண்டிய வசதிகள் கிடைக்கவில்லை, வாழ்க்கையை நடத்துவது கடினமாகிவருகிறது. எனவே, ஆளும் மையவாத கட்சிக்கு மக்களிடையே ஆதரவு சரிந்துவிட்டது.

சோஷியல் டெமாக்ரட், ஃப்ரீ டெமாக்ரட், கிரீன்ஸ் என்ற மூன்று மையவாத அரசியல் கட்சிகளின் கூட்டணிக்கு ஆதரவு குறைந்துவிட்டது. அதேசமயம் இதனால் பயன் அடைந்தது கிறிஸ்டியன் டெமாக்ரட்ஸ், கிறிஸ்டியன் சோஷலிஸ்ட்ஸ் ஆகிய மையவாத - வலதுசாரி கட்சிகள் அல்ல, அதிதீவிர வலதுசாரி கட்சியான 'ஏஎஃப்டி' கட்சி. அதாவது ஜெர்மனியின் வளர்ச்சிக்கான மாற்று அரசியல் உத்தி கட்சி!

அதேசமயம், சாரா வேகன்நெக் என்பவர் தலைமையிலான புதிய இடதுசாரி கட்சிக்கு அதன்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஆட்சிகளைப் பிடிக்கும் வலதுசாரிகள்!

4ம் பக்க தொடர்ச்சி...........

தாய்க் கட்சியான 'டை லிங்க்' என்பதைவிட மக்களிடையே ஆதரவு அதிகமாகிவருவதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. டை லிங்க் கட்சியானது நேட்டோவுக்கு எதிராகக் குரல் கொடுக்க துணிவில்லாமல் தொடை நடுங்கியாக இருக்கிறது. சாராவின் கட்சிக்கு, தோன்றிய ஏழு மாதங்களிலேயே 7% முதல் 9% வரையில் மக்களிடையே ஆதரவு குவிந்திருக்கிறது.

## காங்கிரஸுக்கு அதிக தொகுதிகள்

இவற்றிலிருந்து தெரிவது, மையவாத அரசியல் கட்சிகள் உலகெங்கிலும் ஆதரவை இழந்துவருகின்றன, தீவிர வலதுசாரி அல்லது தீவிர இடதுசாரி கட்சிகள் மேலெழுந்துவருகின்றன. ஆனால், இடதுசாரி கட்சிகள் சரியான அரசியல் தலைமை இல்லாததாலோ அல்லது கட்சியமைப்பு இல்லாததாலோ இருப்பதால் பெரிதாக வளரவில்லை.

இந்தியாவிலும் சமீபத்தில் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அதிகமானதற்குக் காரணம் நவதாராளமயக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு இடதுசாரிக் கொள்கைகளுக்கு நெருக்கமானவற்றைத் தேர்தல் அறிக்கையில் அறிவித்ததுதான்.

பொருளாதார செயல்திட்டங்களில் வலதுசாரிகளுக்கும் இடதுசாரிகளுக்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு இருக்கிறது. வலதுசாரி கட்சிகள் சிறிது காலம் கழித்து நவதாராளமயக் கொள்கையுடன் சமரசம் செய்துகொண்டு பெருநிறுவனங்களின் சில்லாதிக்க ஆட்சியை (ஆலிகார்க்கி) ஆதரித்துவிடும். இத்தாலியின் ஜார்ஜ் மெலோனியும் இந்தியாவின் நரேந்திர மோடியும் இதற்கு உதாரணங்கள்.

பிரான்ஸ் நாட்டில் பிரதமர் பதவிக்கான வேட்பாளர் ஜோர்டான் பார்டெல்லா, தேர்தலுக்கு முன்னதாகவே நவதாராளமயக் கொள்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கத் தொடங்கிவிட்டார். சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் சில்லாதிக்க நிறுவனங்கள் மையவாத அரசியல் கட்சிகளுக்கு அளித்த ஆதரவை விலக்கிக்கொண்டு தீவிர வலதுசாரி கட்சிகளை ஆதரிக்கத் தொடங்கியதும்கூட அவற்றின் சரிவுக்கு முக்கிய காரணமாகும்.

தீவிர வலதுசாரி கட்சிகள் தங்களுடைய பொருளாதாரக் கொள்கையை வெளியில் தெரியாமல் மறைக்க, சிறுபான்மைச் சமூகத்துக்கு எதிராக பெருங்குரலெடுத்து பிரச்சாரம் செய்து உழைக்கும் மக்களைப் பிரித்துவிடும். சிறுபான்மைச் சமூக மக்களுக்கு எதிராக பெரும்பான்மை சமூக ஏழைகளுக்கு வெறுப்பை வளர்த்துவிடும். பெருநிறுவனங்கள் ஆதரிக்கும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மக்களிடையே ஆதரவு இல்லையென்றாலும் தீவிர வலதுசாரி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்துதங்களுடையசெல்வாக்கைத்தக்கவைத்துக்கொள்ளும்.

## கிரேக்க வெற்றி

கிரீஸ் (கிரேக்கம்) நாட்டில் இடதுசாரித் தலைவர் சிரிசா, சர்வதேச நிதியமைப்புகளுக்கும் பெருநிறுவனங்களின் கூட்டுக்கும் எதிராக அரசியல் செய்து வெற்றிபெற்றார். அப்படி மாற்றுப் பொருளாதார திட்டங்களுடன் துணிச்சலாக களம் இறங்காததால் பிரான்ஸில் இடதுசாரி கட்சிகளின் அமைப்புகளுக்கு அரசியல்ரீதியாக வெற்றி கிட்டவில்லை. அந்த அமைப்பிலும் அலைபாயும் மனதுடன் இருக்கும் சிறிய கட்சிகளை வேறு குழுக்கள் தங்கள் பக்கம் இழுத்துவிடுகின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கூட்டணிக்கும் பெரும்பான்மை இல்லை, ஆனால் இடதுசாரி கட்சிகளின் அமைப்புக்குத்தான் அதிக இடங்கள் கிடைத்துள்ளன என்றாலும், ஆட்சியமைக்க அவை அழைக்கப்படுவதில்லை. இடதுசாரிகளை ஒதுக்கிவிட்டு கூட்டணி அரசு அமைக்க தீவிர வலதுசாரி கட்சிகளும் மையவாத - வலதுசாரி கட்சிகளும் பல்வேறு சமரசங்களைச் செய்து கொண்டு கைகோக்கின்றன.

அப்படியே இடதுசாரி கட்சிகள் சேர்ந்து ஆட்சியமைத்தாலும் பெருமுதலாளிகளும் முதலீட்டாளர்களும் தங்களுடைய முதலை விலக்கிக்கொண்டு, வேறு நாடுகளுக்குச் சென்றுவிடுகின்றனர். பிரான்ஸில் பிராங்குவோ மித்தரான் அதிபரானபோது இப்படித்தான் நடந்தது. அப்படியும் இடதுசாரி கூட்டணி தாக்குப்பிடித்து ஆட்சியைத் தொடர்ந்தால், உலக வல்லரசுகள் அந்த நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை அறிவிக்கின்றன, ஆட்சி கவிழ்ப்பு முயற்சிகளை மேற்கொள்கின்றன.

நவதாராளமயம் என்பது உறக்கத்தில் இருப்பவரை அழுத்திக் கொல்லப் பார்க்கும் அமுக்குவான் பிசாசைப் போல, எளிதில் அதனிடமிருந்து தப்பிவிட முடியாது. பிரான்ஸ் போன்ற நாடு எப்படி அதிலிருந்து தப்பி ஜனநாயகத்துக்குப் புத்துயிர் அளிக்கப்போகிறது என்பதைப் பார்க்க வரும் வாரங்களில் ஆவலோடு காத்திருப்போம்.

© த டெலிகிராப்

# பஸ் மோதி பெண் சாவு

கண்டி, அலதெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புத்தளம் - கண்டி வீதியில் கிரந்தெனிய சந்தியில் திங்கட்கிழமை பஸ் மோதி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அலதெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டையிலிருந்து குருணாகல் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று இருந்த வயோதிபப் பெண் ஒருவர் குறித்த பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியை கடக்க முயன்ற போது அதே பஸ்ஸில் மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


இதனையடுத்து, படுகாயமடைந்த வயோதிபப் பெண் தித்தபஜ்ஜல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, கும்புரேகம பிரதேசத்தில் வசிக்கும் 67 வயோதிபப் பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பஸ்ஸின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அலதெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வாக்காளருக்கா செலவிடக்கூடிய ஆகக்கூடதல் தொகை 109 ரூபாய்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தனது தேர்தல் பிரசாரத்தின் போது ஒவ்வொரு வாக்காளருக்காகவும் செலவிடக்கூடிய அதிகபட்ச தொகையைநிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்கவினால் திங்கட்கிழமை இரவு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஒரு வாக்காளருக்கு செலவழிக்கக்கூடிய அதிகபட்ச தொகை 109.00 ரூபாவென அந்த வர்த்தமானியில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

வர்த்தமானியின் படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் மொத்த செலவினமாக 186 கோடியே 82 லட்சத்து 98 ஆயிரத்து 500 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.(05)

# நிந்தவூர் அல்லிமூலை மல்கமபிட்டி வீதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் பரிதாபச் சாவு



(தில்சாத் பர்வீஸ்)

நிந்தவூர்பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட அல்லிமூலை மல்கமபிட்டி வீதியில் யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று (செவ்வாய்க் கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது

இதன் போது நிந்தவூர் 22 தியேட்டர் வீதியை சேர்ந்த ஜிப்ரி ( மண் வியாபாரி) என்பவரே நேற்று அதிகாலை அல்லி மூலை மல்கம்பிட்டி பாதையால் பயணிக்கும் போது யானை தாக்கியதில் பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

இது குறித்த மேலதிக விசார ணைகளை நிந்தவூர் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர மறுப்போர் வடக்கு கிழக்குக்கு வரவேண்டாம்

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு




இந்திய இலங்டகை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை அதிகாரம் வழங்காத எந்தவொரு வேட்பாளரையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்துள்ள என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் அவ்வாறான நிலைப்பாட்டை நிராகரிப்பவர்கள் வடக்கு கிழக்கு மக்களிடம் வாக்கு கேட்க வரவேண்டியதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஊணலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, தென்னிலங்கையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் வடக்கு கிழக்கு ஒன்றிணையக் கூடாதென்றும் அதிகாரப் பகிர்வுக்கு என்றுமே இடமில்லை என்றும் பொலிஸ் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநயகக் கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் மேலும் பதிலளிக்கையில் -

இலங்கை சுதந்திரம் அடைந்ததுமுதல் தமிழருடைய அரசியலுரிமை பிரச்சினை அவ்வப்போது பேசப்பட்டுவந்தாலும் காலப்போக்கில் பல்வேறு ஒப்பந்தங்கள் பல்வேறு இணக்கப்பாடுகள் பல்வேறு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னரும் அதில் முன்னேற்றங்கள் காணப்படாமையால் தரப்படுத்தலூடாக தமிழ் மக்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆயுதப்போராட்டங்கள் தலைதூக்கி பல உயிர்த் தியாகங்கள் சொத்தழிவுகள் அங்கவீனங்கள் சொல்லெணா துயரங்களுக்கு பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண அரசு முறைமை கொண்டுவரப்பட்டது.

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக கிடைத்த அந்த குறைந்த அதிகாரம் கொண்ட மாகாண முறைமைக்கு அதிகாரங்களோ அதிகாரப் பகிர்வோ வழங்க மறுக்கும் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பிரசார நடவடிக்கைகளுக்கு வரத்தேவையில்லை. அவ்வாறான வேட்பாளர்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.(05)



## பொருளாதாரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்ததும் 12 ரூபாயாக இருந்த முட்டையின் விலை இன்று 55 ரூபாய் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அன்று 950 ரூபாயாக இருந்த எரிவாயு இன்று 4 ஆயிரத்தை தாண்டியுள்ளது. அன்று ஒரு கிலோ அரிசி 80 ரூபாவாக இருந்ததாகவும், இன்று 220 ரூபாயை தாண்டியுள்ளது, அன்று 117 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோல் இன்று 340 ரூபாய்க்கு உயர்ந்துள்ளது.

பொருளாதாரத்தை கட்டியெழுப்பினால் பொருட்களின் விலை குறையவேண்டும் என்பதையும்அவர்சுட்டிக்காட்டினார்.

கிரிபத்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## தேசிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கண்ணோட்டத்தில், இது 60%- முதல் 70% வரை இருக்கலாம். எப்படியிருந்தாலும் 51%ஐ விட அதிகமான வாக்குகளை நிச்சயம் பெறும் - என்றார்.

## கட்சிகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிஅறிவித்திருந்தநிலையில், கொத்மலைபிரதேசத்தில்எவருக்கும் அவ்வாறான உறுதிப் பத்திரம் கிடைக்கப்பெறவில்லை எனவும், இன்றைய நிலையில் குறித்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரும் இல்லை எனவும் இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார்.

## பெரஹறவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரஹராவில் இரண்டு யானைகளுடன் பிரதான யானை பயணிக்கும். இது தொடர்பில் அதிகாரிகள்விசேடகவனம்செலுத்தி பெரஹராவிற்கு அடக்கமான யானைகளை வழங்கவேண்டும் என்றுவரலாற்றுசிறப்புமிக்ககண்டி ஸ்ரீ பத்தினி ஆலய பஸ்நாயக்க நிலமே ஹேமந்த பண்டார ஹேரத் தெரிவித்தார்,

## எம்.பி. ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு இலங்கையரும் கட்சியைச் சுற்றி அணிவகுத்து வருவதாகவும்மரிக்கார்தெரிவித்தார்.

கிராமத்தில், சந்தியில், சந்தையில், முச்சக்கரவண்டியில், மாலகெதரவில், கல்யாணத்தில், அன்னதான வீட்டில், பிரசங்க வீட்டில் சஜித்தின் வெற்றி குறித்து மட்டுமே பேசுகிறார்கள், நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். சஜித்தின் வெற்றியேநாட்டில்நிலவும்அரசியல் யதார்த்தம்என போட்டிக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூறுகின்றனர். சஜித் வெற்றி பெறுவார் என்று ரணிலின் நிழலில் இருப்பவர்களுக்கேகூடத் தெரியும், இப்போது அதை தடுக்க முயல்கிறார்கள்.

தற்போதைய ஜனாதிபதி வரிசையை முடித்து நாட்டை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்திருந்தால் யாருக்கும் பிரச்சினை இல்லை. ஒரு முட்டை 13 ரூபாய்க்கும், ஒருலீற்றர்பெட்ரோல்117 ரூபாய்க்கும், காஸ் சிலிண்டர் 1600 ரூபாய்க்கும் அல்லது அரிசி, பருப்பு முன்பு இருந்த அதே விலையில், தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணம் போன்றவற்றுக்கு விற்றிருந்தால் ரணில் கூறும் வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவராகஅவரை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அப்படி நடக்கவில்லையே - என்றார் மரிக்கார்.







## பெண்ணின் சடலம் நுவரெலியாவில் மீட்பு

நுவரெலியாவில் அடையாளம் தெரியாமல் காணப்பட்ட பெண்ஒருவரின் சடலத்தினை பொலிஸார் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சடலம் திங்கட்கிழமை மாலை நுவரெலியா கிரகரி வாவிக்கு அருகாமையில் உள்ள வீதியோரத்தில் விழுந்து கிடந்ததை அவதானித்த பொதுமக்கள்பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் 1990 அவசர நோயாளர் அம்புலன்ஸ் சேவைக்கு தெரிவித்ததையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த மருத்துவ உதவி அதிகாரிகள் குறித்த பெண் உயிரிழந்துள்ளதை உறுதிப்ப டுத்தியுள்ளனர்.

இவ்வாறு வீதியோரத்தில் கிடக்கும் பெண்ணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்ப டவில்லை எனவும் நீதிமன்ற அனுமதியை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு கிரான், பொண்டுகள் சேனை வீதியில் திங்கட்கிழமை காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கிரான், புலிப்பாய்ந்தகல் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் புலிபாய்ந்தகல் பகுதியிலுள்ள தனது வீட்டிலிருந்து பூலாக்காடு பகுதியில் உள்ள ஆல யம் ஒன்றை நோக்கி துவிசக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத் திற்கு விரைந்த கோரளைப்பற்று தெற்கு, கிரான் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோத னைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலமானது உறவினர்களிடம் நேற்று(செவ்வாய்க்கிழமை) கையளிக்கப்பட்டது.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு களைகட்டும் அறுகம்பை உல்லை பகுதி





(பாறுக் ஷிஹான்)

இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை காரணமாக பொத்துவில் அறுகம்பே பிரதேசம் உல்லாசப் பிரயாணிகளால் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இதனால் அறுகம்பே வளைகுடா கடற்கரையை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கடற்கரைப் பகுதிகள் சர்வதேச அரங்கில்பல்வேறு தர இடத்தைப் பெற்றிருக்கின்றன. அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள அறுகம்பே கடற்கரைப் பிரதேசதம் பல்வேறு சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளதால் இப்பிரதேசத்திற்கு தினமும் உள்ளூர் வெளிநாட்டு உல்லாச பிரயாணிகள் ஆயிரக்கணக்கானோர் தமது பொழுதினைப் போக்குவதற்காக வருகை தருகின்றனர்.

கடந்த கால கொரோனா அனர்த்தம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பொருளாதார சீர்கேடு (எரிபொருள் பற்றாக்குறை எரிவாயு பற்றாக்குறை) அரகல கிளர்ச்சி உள்ளிட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்பிரதேச சுற்றுலாத்துறை வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது.எனினும் தற்போது நாடு மீளஎழுச்சி பெற்று வருவதனால் இப்பிரதேசத்தின் துறைசார்ந்த மக்களின் வாழ்வாதார விருத்தி ஏற்பட்டு வருவதுடன் வர்த்தக பொருளாதார ரீதியிலான மேம்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.இங்கு வருகை தரும் உள்ளூர் வெளிநாட்டு பயணிகளின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துவதற்காகவும் கடலலை விளையாட்டில் ஈடுபடுபவர்களையும் பாதுகாப்பதற்கென அரச பாதுகாப்புப் படையினரும்சேவையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.அண்மையில் கூட உள்ளூர் பயணிகள் 5 பேர் கடலலையில் சிக்குண்ட நிலையில்அங்குநிலைகொண்டுள்ளவிசேடஅதிரடிப்படையின் உயிர் காப்பு படையினரால் காப்பாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர இப்பகுதிகளில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வருகையினைப் போல் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் இப்பகுதிக்கு விருப்புடன் வருகை தருகின்றனர்.இதனால் தங்குமிட வசதிகள் உணவகங்கள் அதிகளவில் இப்பகுதியில் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்கடற்கரைப் பிரதேசதம் உலகரங்கில் மிகப் பிரபல்யம்பெறுவதற்குசர்வதேசஅளவில்இக்கடற்பரப்பில்நீரலைச் சறுக்கு விளையாட்டுப் போட்டிகள் வருடந்தோறும் இப்பிரதேசத்தில் நடைபெற்று வருகின் றன.இங்கு சர்வதேச ரீதியிலான நீரலைச் சறுக்கு விளையாட்டு இக்கடற்பரப்பில் வருடந்தோறும் இடம்பெறுவதனால் பல நூற்றுக்கணக்கான வெளிநாட்டு போட்டியாளர்களும் அவர்களோடு இணைந்ததாக பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் இப்பிராந்தியத்திற்கு வருகை தருவது இலங்கைநாட்டுக்கு அந்நியச்செலாவணியினைபெருமளவில் ஈட்டிக் கொள்வதற்கு வழிகோலியாகவும் அமைகின்றது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இப்பிரதேசத்தில் முகாமிட்டு சில நான்கள் தங்கியிருந்து இப்பிரதேசத்தின் அழகினை இரசிப்பதால் இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நிலையங்கள் பல்வேறானவை அமையப் பெற்றுள்ளன. இதனால் பெருந்தொகை அந்நியச் செலாவணி நாட்டுக்கு வருமானமாய் கிட்டி வருகின்றன.இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் சுமார் 30 ஆயிரத்துக்கு அதிகமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.அத்துடன் ஏப்ரல் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை பொத்துவில் அறுகம்பே பிரதேசம் உல்லாசப் பிரயாணிகளின் வருகை மற்றும் பொழுது போக்கும் பருவ கால இடமாக கூறப்படுகின்றது.இதை விட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பேராதனைப் பூங்கா, நுவரெலியா , பாசிக்குடா, உல்லை , போன்ற இடங்களுக்கு பெருமளவில் சென்று பொழுதைக்கொண்டாடிஉல்லாசமாக கழித்து வருகிறார்கள் .

இந்த வருடத்தில் இதுவரை பன்னிரண்டு லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்குவருகைதந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.இதற்கமைய பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு பெருந் தொகையான உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.குறிப்பாக அறுகம்பை உல்லை பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் உள்ளூர் சுற்றுலா பயணிகளும் சரளமாக இணைந்து குதூகலமாக பொழுதைக் கழிப்பதற்காக இப்பிரதேசத்திற்கு படை எடுத்து வருகின்றனர்.

இதை விட கணிசமான வருமானத்தை ஈட்டும் சாத்தியக்கூறுகளுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் விரும்பத்தக்க இடமாக அறுகம்பே சுற்றுலா வலயத்தை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த அறுகம்பே வளைகுடா கடற்கரையோரத்தில் பிரபலமாக விளங்கும் நீர் பனிச்சறுக்கு போன்ற நீர் விளையாட்டுகளை ஊக்குவிப்பதன் மூலம் கணிசமான வருமானத்தை அடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட சுற்றுலாத்துறையின் முக்கிய பங்குதாரர்களுடன்கடந்த காலத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

2035 ஆம் ஆண்டளவில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத்துறை 10வீதம் பங்களிப்பை வழங்கும் என உலகளாவிய அறிக்கைகள் முன்னறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான மாற்றத்திற்கு இலங்கை முன்கூட்டியே தயாராகி வருவதைனை அருகம்பே வளைகுடா கடற்கரை வெளிநாட்டு உள்ளூர் பிரயாணிகளின் வருகை உறுதிப்படுத்துகின்றன.

(05)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சோக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

பேலியகொடை,நாரம்மினிய பிரதேசத்தில் வீடொன்றுக்கு அருகில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதோடு, தாக்குதலில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை காலை உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவர் களனி, நாரம்மினிய பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஆணொருவராவார். தனிப்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய, கொட்டுகச்சிய பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேகநபர் குற்றச் செயல்களுக்காக பயன்படுத்தப்படும் கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும்,சம்பவம்தொடர்பாக மேலதிக விசாரணைகளை பேலியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.(05)

## கடலில் மூழ்கி உயிருக்குப்போராடிய இளைஞன் பாணந்துறையில் மீட்பு

பாணந்துறை கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர் பாணந்துறை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனொருவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் திங்கட் கிழமை மாலை பாணந்துறை கடலுக்கு நீராடச் சென்றுள்ள நிலையில் திடீரென நீரில் மூழ்கியுள்ளார்.இதன்போது, அங்கிருந்த பாணந்துறை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் இந்த இளைஞனைக்காப்பாற்றி முதலுதவி அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

## கூடுதல் விருப்பு வாக்குகளுடன் ஜனாதிபதியாக ரணில் வெல்வார்

### யூ.கே. ஆதம்லெவ்வை நம்பிக்கை

(எம்.எப்.றிபாஸ்)

கூடுதலானவிருப்புவாக்குகளை பெற்று ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க நாட்டுக்காகவே போட்டியிடுகின்றார். ஒரு கட்சி சார்ந்தோ, ஒரு குழுவினர் சார்ந்தோ அல்லாமல் சுயாதீன வேட்பாளராகவே களம் இறங்கி யுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின்பொத்துவில்தொகுதியின் பிரதம அமைப்பாளர் யூ.கே. ஆதம்லெவ்வை தெரிவித்தார்.

அட்டாளச்சேனை பிரதேசத் தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கட்சி ஆதரவா ளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அமைப்பாளர் தனது உரையில் -

நாட்டை கட்டி எழுப்பக் கூடிய ஒரு தலைவராக ரணில் விக்கிர மசிங்கவே காணப்படுகின்றார். அவருக்கு ஈடாக அறிவு,அனுபவம் கொண்டவேறுதெரிவுகள்இல்லை. பொருளாதார நெருக்கடியில் இந்த நாடு தத்தளித்த போது நாட்டுக் காகவும், நாட்டு மக்களின் நன்மைக்காகவும்நாட்டைபொறுப் பெடுத்து, மிகவும் கீழ் நிலையில் இருந்த பொருளாதாரத்தை மேல் நோக்கி நகர்த்தி செல்கின்ற ஒரு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க திகழ்கிறார்.

நாட்டுக்கான மிகச் சரியான பொருளாதாரக் கொள்கையை வகுத்து சர்வதேச அமைப்புகள் ஊடாகவும், நாடுகள் ஊடாகவும் நாட்டின் பொருளாதாரத்தின் ஸ்திரதன்மைக்கான வேலைத்திட் டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்ற ஒரு தலைவராக இவர் காணப்படுகிறார்.

குறுகிய காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகின்ற நிலையில், புதியபொருளாதாரக்கொள்கையை உருவாக்கி செயல்படுத்துகின்ற ஜனாதிபதியை விட தற்போதைய நிலையிலிருந்து இந்நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டியஜனாதிபதியையேமக்கள் பெரிதும்எதிர்பார்க்கிறார்கள்.இதற்கு மிகவும்பொருத்தமானவர் ரணில் விக்கிரமசிங்கமாத்திரம்தான்.

நாட்டைமீண்டும்ஒருஇருண்ட யுகத்திற்கு கொண்டு செல்ல நாட்டு மக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். வாழ்க்கைச் செலவு குறைந்து நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்காகவே இங்குள்ள ஒவ்வொரு குடிமகனும் போராடிக் கொண்டிருக்கும்போது, புதிதாக நாட்டை பொறுப்பெடுக்கும் ஒரு தலைவரிடம் மக்கள் சிறந்த தீர்வை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்துள்ளார்கள்.

தேர்தல்கள் வருகின்ற போது சில முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி ஏமாற்றுகின்ற அரசியல் செயற்பாடுகளை கடந்த காலங் களில் நீங்கள் கண்டுள்ளீர்கள். அவ்வாறான ஏமாற்று வித்தைக ளிலிருந்து மக்கள் விலகி, சுதந்திர மாக சிந்திப்பதற்கு தலைப்பட் டுள்ளார்கள்.

பொய்களை நம்பி ஏமாந்து விடும் நிலையில் மக்கள் தற்போது இல்லை.நாடுமுன்னேறவேண்டும் நாட்டு மக்களின் வாழ்வாதாரம் முன்னேற வேண்டும், நாட்டு மக்கள் பிரச்சினைகள் இன்றி நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடு ஏராள மான மக்கள் ரணில் விக்கிரம சிங்கவை ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளார்கள்.

இதன் அடிப்படையிலேயே அம்பாறைமாவட்டவாக்காளர்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு பொருத்தமானதலைவராக இனம் கண்டுள்ளார்கள். இதற்கமைய நாட்டு மக்களின் நலன் கருதி சுயாதீன வேட்பாளராக களம் இறங்கியுள்ள ரணில் விக்கிர மசிங்கவின் கேஸ் சிலிண்டர் சின்னத்திற்கு வாக்களித்து அவருக்கு மீண்டும் ஒரு சந்தர்ப் பத்தை வழங்க நாம் எல்லோரும் கடமைப்பட்டுள்ளோம் எனவும் கூறினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் திட்டத்தை இடைநடுவில் கைவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மீள வீழ்ச்சியடையும்

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

எவராலும் தீர்க்க முடியாமல் போன பொருளாதார நெருக்கடியை தன்னால் தீர்க்க முடிந்திருந்தாலும், சரியான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தாமல், இந்த வேலைத்திட்டத்தை இடைநடுவில் கைவிட்டால், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது எதிர்காலம் குறித்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

'ரணிலிடம் கேளுங்கள்' நிகழ்ச்சியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் சமூக வலைத்தளங்கள் ஊடாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடந்த 75 வருட கால ஆட்சியாளர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக எதனையும் செய்யவில்லை என சில தரப்பினர் குற்றம் சுமத்திய போதிலும் அது உண்மை இல்லையென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேசிய பொருளாதாரம் தொடர்பில் பேசி மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் உருவாக்கிய நிலைப்பாடே நாட்டின் விரைவான பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக அமைந்ததெனவும் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண புதிதாக சிந்தித்து கட்சி பேதமின்றி புதிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக பாரிய குழு தன்னோடு இருப்பதாலேயே ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதியிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி - இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிலிண்டர் சின்னத்தை தெரிவு செய்துள்ளீர்கள் 'யானை' இல்லாமல் 'சிலிண்டர்' தெரிவு செய்யப்பட்டதன் காரணம் என்ன?

பதில் - இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சைவேட்பாளராக போட்டியிட தீர்மானித்தேன். கட்சி சாராமல் செயற்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. அதற்கேற்ப அரசியல் ரீதியாக புதிதாக சிந்திக்க வேண்டும்.

பல குழுக்களுடன் இணைந்து செயற்பட்டதால் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட தீர்மானித்தேன். சுயேச்சை வேட்பாளர் எந்த சின்னத்தையும் தேர்வு செய்யலாம். இத் தருணத்தில் சிலிண்டர் சின்னமே மிகப் பொருத்தமானதாகும்.

கேள்வி - இந்த பொருளாதாரத்தை உங்களால் வலுப்படுத்த முடியும் என நம்புபவர்கள் உள்ளனர். ஆனால் ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைத்ததால் வாக்களிக்கத் தயங்கும் சிலரும் உள்ளனர். அவர்களுக்கு என்ன பதில் சொல்வீர்கள்?

பதில் - எந்த ராஜபக்ஷவைப் பற்றி கேட்கிறீர்கள்? ராஜபக்ஷ என்ற மூன்று வேட்பாளர்கள் உள்ளனர். லக்ஷ்மன் ராஜபக்ஷ, விஜயதாச ராஜபக்ஷ , நாமல் ராஜபக்ச என்று மூன்று பேர் உள்ளனர். அவர்களில் ஒருவரும் என்னோடு இல்லை.

ஜூலை 2022ஐ விட இன்று நிலைமை சிறப்பாக உள்ளதா? அல்லது மோசமாக உள்ளதா? அரசாங்கத்தை வழிநடத்த எனக்கு மொட்டுக் கட்சியின் ஆதரவு கிடைத்தது. அந்த ஆதரவை புறக்கணித்திருந்தால் எண்ணெய், உரம், எரிபொருள் இல்லாமல் தவித்திருக்கலாம்.

அந்த அரசாங்கம் நிறைவுக்கு வந்துவிட்டது. இப்போது தேர்தலுக்கு செல்கிறோம். அவர்கள் தங்கள் வழியில் செல்கிறார்கள். நான் எனது வழியில் போகிறேன். இலங்கையில் இலட்சக்கணக்கான ராஜபக்ஷக்கள் உள்ளனர். அவர்களில் சிலர் எனக்கு வாக்களிக்கலாம். எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தலில் தனியாக களமிறங்க பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது. நாம் வேறொரு தரப்பாக போட்டியிடுகிறோம்.

கேள்வி - ஜனாதிபதி அவர்களே, புல்மோட்டை கனியவளம், திருகோணமலை துறைமுகம், ஹம்பாந்தோட்டை விமான நிலையம் போன்ற வளங்கள் இருந்தும் நாம் முழு உலகிற்கும் கடனாளிகளாகி விட்டோம். இவற்றை 75 ஆண்டு கால ஆட்சியாளர்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என பல்வேறு அரசியல் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்?

பதில் - 75 ஆண்டுகளாக எதுவும் செய்யப்படவில்லை என்று கூற முடியாது. பல நீர்மின் நிலையங்களை கட்டியுள்ளோம். விமான நிலையங்கள் கட்டப்பட்டன. இலவசக் கல்வி முறை கொண்டுவரப்பட்டது. அதனால் 75 வருடங்களாக எதுவும் செய்யவில்லை என்று இவர்கள் எப்படிச் சொல்ல முடியும். உள்நாட்டுப் பொருளாதாரத்தில் மட்டுமே முன்னேற முடியும் என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் திறந்த பொருளாதாரத்தை நோக்கி நகர வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு மாத்திரம் மட்டுப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை உருவாக்கியதாலேயே விரைவான பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியாமல் போனது. அவ்வாறு எந்தவொரு நாடும் வென்றதில்லை. சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற வெற்றிகரமான நாடுகளைப் பார்த்தால் உண்மை புரியும்.

கேள்வி - ஊழல் எதிர்ப்பு மோசடிகளைத் தடுக்க நீங்கள் பல்வேறு சட்டங்களை அறிமுகப்படுத்தினீர்கள். ஆனால், இதனால் சிறிய மோசடிகயை மட்டுமே பிடிக்க முடிவதாக கூறப்படுகிறது.

பதில் - இதனால் பல மோசடிகள் பிடிபடும். 2015ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்ததும் இது தொடர்பில் ஆராய பல குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஜனாதிபதியின் கீழ் ஒரு பிரிவு இருந்தது. மேலும் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவின் கீழ் ஒரு குழுவும் இருந்தது.

பொலிஸில் மற்றொரு தனிப் பிரிவை உருவாக்கினோம். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஊழல் எதிர்ப்பு செயலகம் ஒன்று இருந்தது. இருப்பினும் பல சட்ட சிக்கல்களும் இருந்தன. எனவே புதிய முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

சட்ட விரோதமாக ஈட்டப்படும் வருமானத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பணிக்குழுக்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்.

கேள்வி: பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு பிரபலமடைந்து வருகிறது. அதன்படி, எதிர்கால அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்.

பதில்:நமது சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் செயற்கைநுண்ணறிவைஎவ்வாறுபயன்படுத்தலாம் என்பதை நாம் ஆராய வேண்டும். அது சர்வதேச ஆயுதமாக மாற வாய்ப்புள்ளது.தொடர்ந்தும் உலக நாடுகள் இதைப் பற்றி ஆராய்கின்றன. மேலும் இது தொடர்பாக சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதுவே அடுத்த பத்தாண்டுகளில் ஆராயப்படும். செயற்கை நுண்ணறிவு நம்மை ஆக்கவும் செய்யும் அழிக்கவும் செய்யும். செயற்கை நுண்ணறிவால் என்னென்ன நன்மைகளைப் பெறலாம், அதை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்பதை உள்ளடக்கிய சட்டக் கட்டமைப்பை இன்னும் நம்மால் தயாரிக்க முடியவில்லை. அப்படி ஒரு நவீன நோக்கு என்றுதான் சொல்ல வேண்டும். இவை அனைத்தும் சரியான நேரத்தில் நடக்கும். இருப்பினும், செயற்கை நுண்ணறிவு தேவை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதில் கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

கேள்வி: அரச சேவையை வினைத்திறனான சேவையாக மாற்ற உங்களின் திட்டங்கள் என்ன?

பதில்:10 வருட காலத்திற்குள் அதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசதுறையில் தேவைக்கும் அதிகமாக ஊழியர்கள் உள்ளனர். ஆனால், அவர்களை வீட்டுக்குப் போகச் சொன்னால் என்ன நடக்கும்? ஏனென்றால் அவர்களுக்கு வேறு வருமானன வழி இல்லை. அவர்கள் தெருக்களில் இறங்கி பங்களாதேஷைப் போல செயல்படுவார்கள். எனவே, எப்படியாவது அவர்களை வைத்து சமாளித்துச் செல்ல வேண்டும். அவர்கள் தங்கள் சம்பளத்தை செலவிடுவார்கள். அதனை பாதுகாத்து வைக்கவில்லை. இதன் காரணமாக அந்த பணம் நமது நாட்டின் பொருளாதாரத்தில் சேர்க்கப்படுகிறது. அவர்களின் எதிர்காலத்தை பாதிக்காத வகையில் அவர்களுடன் இதை எப்படி மேற்கொள்ளலாம் என்று சிந்திக்க வேண்டும்.

அரச சேவையை நவீன அரச சேவையாக மாற்றுவதில் எங்களது கவனம் உள்ளது. அடிமட்டத்திலும் அதிக எண்ணிக்கையானவர்கள் உள்ளனர். அவர்களுக்கு புதிய திட்டங்களை வழங்க வேண்டும். ஆனால், வெள்ளம் போன்ற அவசரச் சூழ்நிலைகளில், அரச சேவையின் செயல்திறன் உயர் மட்டத்தில் காணப்படுகிறது. அதன்படி, அரச சேவையில் வெற்றி, பலவீனம் இரண்டும் உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

கேள்வி: இறுதியாக, இந்நாட்டு மக்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

பதில்:யாரும் ஏற்காத நிலையில் தான் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன். பொருளாதார பிரச்சனையை தீர்க்க முடியாது என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் இன்று பொருளாதார பிரச்சினையை தீர்த்து நாட்டை ஒரு நிலையானமட்டத்திற்கு கொண்டு வந்துள்ளோம். இந்தப் பயணத்தை இத்துடன் நிறைவு செய்ய முடியாது. இந்த நாட்டின் பொருளாதாரம் ஒரு புதிய மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும். நாம் ஏற்றுமதி பொருளாதாரமாக மாற வேண்டும். அந்த நிலைக்குச் செல்லாவிட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். எனவே, அடுத்த சில வருடங்கள் குறித்து சிந்தித்து முடிவெடுக்குமாறு மக்களிடம் கூறுகிறேன். அடுத்த 20 வருடங்கள் குறித்து யோசித்து முடிவெடுக்குமாறு இளைஞர்களிடம் கோருகிறேன். - என்றார்.

(05)

# தாயின் கையிலிருந்த வேட்டைதுப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மகன் காயம்

சூரியவௌகடுகினிஸ்ஸபிரதேசத்தில் தாயொருவரின்கையிலிருந்தவேட்டை துப்பாக்கி ஒன்று வெடித்தில் மூன்று வயதுடையமகன்காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது-

காயமடைந்த மகனின் தாயார் தென்னை மரத்திற்கு அருகில் இருந்த வேட்டைதுப்பாக்கிஒன்றினைகையில் எடுத்து சரிபார்க்க முயன்றுள்ளார்.

இதன்போது, அந்த துப்பாக்கி திடீரென வெடித்ததில் அருகிலிருந்த மகனின் கன்னத்தில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மகன் அம்பாந் தோட்டை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(05)

# துப்பாக்கியை காண்பித்து அச்சுறுத்தியவர் கைது

## ஹகரங்கலில் சம்பவம்

இரத்தினபுரி , கலவானை பொலிஸ் பிரிவிற்குட்பட்டஹகரங்கலபிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து துப்பாக்கியை காண்பித்து அச்சுறுத்தியதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

கலவானை பொலிஸாருக்குக் கிடைத்தமுறைப்பாட்டின்அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலவானை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக் கப்பட்ட துப்பாக்கி ஒன்று கைப்பற் றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கலவானை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட இஞ்சியுடன் சந்தேகநபர் கைது

இந்தியாவிலிருந்துமீன்பிடிபடகுகள் மூலம் சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 519 கிலோ 750 கிராம் இஞ்சியுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார்இராணுவபடையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட போது, இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இஞ்சியுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்ப்பட்ட சந்தேகநபர் மன்னாரைச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

நாட்டின் பல்வேறு பகுதிக ளில் இஞ்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளமையாலும், விலை அதிகரிப்பாலும், இந்தியாவிலிருந்து பச்சை இஞ்சி கடத்தல் மேற்கொண்டு அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சித்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேகநபர் இஞ்சியை பல பைகளில் பொதி செய்து வௌவேறு பகுதிகளுக்கு விற்பனை செய்ய தயார் நிலையில் இருந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# புதையல் தோண்டியவர் வவுனியாவில் கைது







வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவரை நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை கைதுசெய்துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவரிடம் இருந்து புதையலை கண்டறிவதற்காக பயன்படுத்தபடுத்தப்படும் ஸ்கானர் கருவி உட்பட மண் அகழ்வதற்கான உபகரணங்கள் மற்றும் மோட்டார் சைக் கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியாஇராணுபுலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக ஓமந்தை பொலிஸாரால்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 54 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நேற்று வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## கொவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில்

# மக்களின் சுகாதார உரிமைகள் மீறப்பட்டதா? பொது விசாரணை அட்டாளைச்சேனையில்





(பாறுக் ஷிஹான்)

தொற்றுநோய் கால நீதி மற்றும் சுகாதார உரிமை தொடர்பான மக்கள் ஆணையம் நடத்திய கொவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில் உங்களது சுகாதார உரிமைகள் மீறப்பட்டதா? உங்களிடம் மறக்க முடியாத அனுபவம் உள்ளதா? என்பது தொடர்பிலான பொது விசாரணை நிகழ்ச்சி திங்கட்கிழமைகாலை முதல் மாலை வரை அட்டாளைச்சேனை தனியார் விடுதியில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு எல்.எஸ்.றி அமைப்பால் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இத் தீட்டத்தை அம்பாறை மாவட்டமட்டத்தில் மனித எழுச்சி அமைப்பின் இயக்குநரான கே. நிஹால் அஹமட் அவர்களுடைய ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது. இதன்போது ஆணையத்தின் தலைவரான சர்வோதய தலைவர் வின்யா ஆரியரட்ன, ஆய்வாளர் சிவஞானம் பிரபாகரன், கலாநிதி உபுல் விக்ரமசிங்க ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மாவட்ட மட்டத்தில் மூவின சமூகங்களுடைய பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர். அனைவருக்கும் சம பங்கு பொறுப்புக்கூறல் மற்றும் ஆரோக்கி யத்திற்கான உரிமைகளை உறுதிப்படுத்தல் தொடர்பில் பல்வேறு விளக்கவுரைகள் வழங்கப்பட்டு பங்கேற்பாளர்கள் அனைவரும் கொவிட் -19 மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில் உங்களது சுகாதார உரிமைகள் மீறப்பட்டதா? உங்களிடம் மறக்க முடியாத அனுபவம் உள்ளதா? எனும் கருத்துக்களை பொதுவெளியில் பரிமாறிக்கொண்டனர்.

மேலும் தொற்றுநோய் கால நீதி மற்றும் சுகாதார உரிமைகளுக்கான மக்கள் ஆணையத் திட்டம் அர்ப்பணிப்புடன் செயற்படுவது குறித்தும் கோவிட்-19 தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள்இ குறிப்பாக ஒதுக்கப்பட்ட மற்றும் இலகுவாக பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய மக்களிற்கு சுகாதாரப் பராமரிப்பை அணுகுவதில் உள்ள தாக்கம் பற்றி ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்தல் தொடர்பிலும் சுகாதார நெருக்கடிகளிற்கு அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களை அவர்களது கடமைகளிற்கு பொறுப்புக் கூற வைத்தல்.சுகாதார அணுகல்தொடர்பான முடிவு எடுக்கும் நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மைஇ சமத்துவம் மற்றும் பொறுப்பு கூறல் ஆகியவற்றைக் கோரல் சுகாதாரப் பராமரிப்பிற்கான சர்வதேச அணுகலை ஊக்குவிக்கும் கொள்கைகள் மற்றும் ஆரம்ப முயற்சிகளிற்கான அறிவூட்டல்இ ஒதுக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளிற்கு முன்னுரிமை அளித்தல், மற்றும் சுகாதார கட்டமைப்பில் உள்ள முறையான சமமின்மையை நிவர்த்தி செய்தல். சமூகங்களின் சுகாதாரத்திற்கான உரிமையினை நிலைநாட்டுவதற்கு அவர்களிற்கு அதிகாரமளித்தல், முடிவுஎடுக்கும் நடைமுறைகளில் அவர்களது குரல் ஓங்கி ஒலிக்கச்செய்தல், சமூக நீதி மற்றும் சுகாதார சமத்துவத்தை முன்னேற்றக்கூடிய கருத்துள்ள கொள்கை மாற்றங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கல் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2024இல் வெளியிடப்பெற்றது